***கவனிக்க.*** *- 08.11.2024 ஆந் திகதிய 2410 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


**අංක 2411 - 2024 නොවැම්බර් මස 14 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.11.14**

*2411 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | ஆதன விற்பனைகள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 2 | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | | | |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2024, திசெம்பர் மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, நவெம்பர் மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## திக்குவல்லை பிரதேச சபை

துணைச் சட்டங்களை ஏற்றுக்கொள்ளல்

*2014.12.12 ஆம் திகதிய 1893 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரத்தின் IV (ஆ) பகுதியில் திக்குவல்லை பிரதேச சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என பொது மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (அங்கீகரிக்கப்பட்ட துணைச் சட்டம்) சட்டத்தின் 2 ஆம் உறுப்புரையில் (01) ஆம் துணை உறுப்புரையின் கீழ் கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரங்களுக்கு ஏற்ப தென் மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு, 2013.05.17 ஆம் திகதிய 1811 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரத்தின் மூலம் வெளியிடப்பட்டதும் தென் மாகாண சபையினால் அனுமதிக்கப்பட்டது என்பதை 2014.08.29 ஆம் திகதிய 1878 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரத்தில் வெளியிடப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட துணைச் சட்டங்களில் XXVII துணைச் சட்டமான பிரச்சார விளம்பரம் பற்றிய துணைச் சட்டம் இதுவரை மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு பங்கம் ஏற்படாத விதத்தில் முடிவுக்குக் கொண்டு வந்து, 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க (அங்கீகரிக்கப்பட்ட துணைச் சட்டம்) சட்டத்தின் 02 ஆம் துணை உறுப்புரையின் கீழ் உள்ளூராட்சி அமைச்சரினால் தயாரிக்கப்பட்ட 1988.08.23 ஆம் திகதிய 520/7 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானப் பத்திரத்தில் IV (ஆ) பிரிவில் வெளியிடப்பட்ட துணைச் சட்டங்களில் 39 ஆம் துணைச் சட்டமான பிரச்சார விளம்பரம்/காட்சிச் சூழல் பற்றிய துணைச் சட்டத்தை வர்த்தமானிப் பத்திரத்தில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டு அமுல்படுத்துவதற்கு திக்குவல்ல் பிரதேச சபையின் செயலாளரின் 2024/09/13/247 ஆம் தீர்மான இலக்கத்தின் கீழ் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9.3 ஆம் உறுப்புரையினால் என் மீது வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் தீர்மானிக்கப்பட்டது என இதன் பொது மக்களுக்கு அறிவிக்கப்படுகிறது.*

*சாந்தனீ வேரகொட,*
*செயலாளர்,*
*பிரதேச சபை திக்குவல்ல.*

*திக்குவல்ல பிரதேச சபை அலுவலகம்,*
*2024 செத்தெம்பர் 18.*

*11-164*

---

## மத்துகம பிரதேச சபை

மாடுகள் அறுக்கும் கட்டளைச் சட்டத்தின் கீழ் இறைச்சிக் கடை நடத்துவது
தொடர்பில் ஆட்சேபனைகள் கோருதல்

*மத்துகம பிரதேச சபைக்கு சொந்தமான பொதுச்சந்தை இலக்கம் 24 கொண்ட கடை அறையை 2025 ஆம் ஆண்டு மாட்டிறைச்சி விற்பனை தொடர்பாக குத்தகைக்கு நடத்துவதற்கு கடையை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் ஆட்சேபனைகள் இருப்பின் 2024.12.08 ஆம் திகதிக்கு முன்னர் மத்துகம பிரதேச சபையின் தலைமைக் காரியாலயத்தில் சமர்ப்பிக்குமாறு இத்தால் பொதுமக்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*நெலு நிஷாந்தி இத்தகொட,*
*செயலாளரும் மத்துகம பிரதேச சபையின் அதிகாரங்களை,*
*வேலைகளை மற்றும் கடமைகள் நடைமுறைப்படுத்தும் அதிகாரியும்,*
*மின்னஞ்சல் -* mathugamapradesiyasaba@gmail.com

*11-174*

## கொழும்பு மாநகர சபை

*மிருகங்கள் அறுத்தல் தொடர்பான கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 272)*

*இணைக்கப்பட்டுள்ள உப பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்களுக்கு முன்பாக காணப்படும் விபரங்களின் படி அந்தந்த விலாசங்களில் 2024 ஆம் ஆண்டு இறைச்சிக்கடைகள் நடாத்துவதற்கு இறைச்சிக் கடை அனுமதிப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன. இந்த அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் வசிக்கும் எந்த நபரிடம் இருந்தாவது எதிர்ப்பு தோன்றுமாயின் அவை எழுத்து மூலம் இரண்டு பிரதிகளுடன் தயாரிக்கப்பட்டு அறிவித்தலில் காணப்படும் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் என்னை வந்து சேரும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். மிருகங்கள் அறுத்தல் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் (272) ஆவது அத்தியாயத்தின் 07 (02) ஆவது பிரிவின் படி இவ்வறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

ஜே. எம். பத்ராணி ஜயவர்தன,
கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரும்,
சபையின் அதிகாரங்களை. வேலைகளை,
கடமைகளை அமுல்படுத்தும் அதிகாரியும்.

நகர மண்டபம்,
கொழும்பு 07,
*2024 ஒற்றோபர் 23.*

**அட்டவணை 01**

| தொடர் இலக்கம் | விண்ணப்பதாரரின் பெயர் | கடை இலக்கம் | வியாபாரம் |
|---|---|---|---|
| | | | |
| **டீன்ஸ் பாதை சந்தை** | | | |
| 1 | திரு. எம். பீ. எம். இசாம்டீன் | 44/12 | மாட்டிறைச்சி |
| **வெள்ளவத்தை சந்தை** | | | |
| 2 | திரு. எம். ஏ. யூஷுப் | 2 | மாட்டிறைச்சி |
| **விஸ்ட்வயிக் சந்தை** | | | |
| 3 | திருமதி ஜே. எச். பதுருநிசா | 30/5 | ஆட்டிறைச்சி |

*11-187*

---

## மாத்தறை மாநகர சபை

*1975 ஆம் ஆண்டின் 17 மஆம் இலக்க சங்கங்களின் உறுதிப்பத்திரம் வழங்கும் சட்டம்*

*இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் மூலம் அவர்களின் பெயர்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள சங்கங்களை, அதில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் நடாத்திச் செல்வதற்கு 2025 ஆம் ஆண்டிற்கான உறுதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பித்துள்ளார்கள் என்பதை 1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சங்கங்களுக்கான உறுதிப்பத்திரம் வழங்கும் சட்டத்தின் (06) ஆம் பிரிவின் "ஆ" அத்தியாயத்தின் கீழ் அறியத்தருகின்றேன்.*

இந்த சங்கங்களுக்கு அருகாமையிலே, குறிப்பிடப்பட்ட இடங்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட இடங்களிலோ வசியும் ஒரு நபரினால் விளையாட்டு சங்கங்களுக்கான உறுதிப்பத்திரம் வழங்குவதற்கு மறுப்புக்கள் தெரிவிக்கப்டுமாயின் இந்த அறிவித்தல் கொடுக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு 04 கிழமைக்குள் தகுத்த மறுப்புக் காரணங்கள் காட்டி எனக்கு எழுத்து மூலம் பிரதிகள் இரண்டு தருமாறு இத்துடன் அறியத்தருகிறேன்.

நெலுமி ஏ. கமகே,
நகர ஆணையாளர்,
மாத்தறை மாநகர சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மாத்தறை,
2024, நவெம்பர் 02.

**அட்டவணை**

| விணப்பதாரியின பெயர் | சங்கத்தலைலர முகாமையாள செயலாளர் | சங்கத்தின் பெயர் | சங்கம் நடத்தப்படும் இடம் |
|---|---|---|---|
| 1. லலித் சிரிவர்தன | செயலாளர் | ஜனதா விளையாட்டுச்சங்கம் | இல. 50, குமாரதுங்க வீதி, மாத்தறை. |
| 2. கே.எஸ். சுனில் | செயலாளர் | ஔசியஸ் விளையாட்டுச்சங்கம் | இல. 76, ராகுல வீதி, மாத்தறை. |

11-192

---

**நியாகம மாநகர சபை**

திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பாக அங்கீகாரம் பெற்ற துணை விதி

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கமுடைய மாகாண சபை (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பந்தியுடன் வாசிக்கப்படுகின்ற 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்கமுடைய உள்ளூராட்சி தாபனம் (அங்கீகாரம்பெற்ற துணை விதிகள்) சட்டத்தின் 2 ஆவது பந்தியின் கீழ் தென் மாகாண உள்ளூராட்சி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரால் தொகுக்கப்பட்ட 2013.10.25 ஆந் திகதி இலக்கம் 1834 உடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிஷேட வர்த்தமானி பத்திரிகையில் IV (அ) வது பகுதியில் மேற் கூறப்பட்ட வரைவு துணை விதி பிரசுரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கமுடைய பிரதேச சபை சட்டத்தின் 122 ஆவது பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் 93 ஆம் பந்தியில் மற்றும் 126 ஆவது பந்தியில் IX வது உப பிரிவின் (ஆ) மற்றும் (இ) பந்தியில் திண்ம கழிவு பொருட்கள் முகாமைத்துவம் பற்றிய துணை விதி விதிப்பதற்கு பிரதேச சபைக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களின் படி 1987 ஆம் ஆண்டு 15ம் இலக்கமுடைய பிரதேச சபை சட்டத்தின் 9(3) உப பிரிவின் படி எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2013.10.25 ஆந் திகதி இலக்கம் 1834 உடைய வர்த்தமானிப் பத்திரிகையில் IV (அ) ஆவது பகுதியில் பிரசுரிக்கப்பட்ட திண்ம கழிவு பொருட்கள் முகாமைத்துவம் பற்றிய துணை சட்டத்தை ஏற்றுக்கொள்ளுவதற்கு 2024, நவெம்பர் மாதம் 01 ஆந் திகதி தீர்மான இலக்கம் 501 இன் கீழ் தீர்மானம் செய்யப்படதாகவும், இந்த அறிவிப்பை வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் திகதியில் இருந்து நியாகம பிரதேச சபை அதிகார எல்லைக்குள் செயல்படுத்தப்படும் என்றும் இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

டப்.கே.கே. சாமர,
செயலாளர்,
நியாகம பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
நியாகம.
2024 நவெம்பர் 01.

11-193

## கங்க இஹல கோரல பிரதேச சபை

*ஊன்வினைஞர் னட்டனைச் சட்டம் தொடர்பான சட்டம் (272 ஆம் அதிகாரம்)*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9(3) பிரிவினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 திகதி 658 ஆம் தீர்மான இலக்கத்தின் படி கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானம் எடுக்கப்பட்டது என பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

எச். தர்மரத்ன,
செயலாளர்,
கங்க இஹல கோரல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குருந்துவத்தை பஸார்,
கங்க இஹல கோரல,
2024, நவெம்பர் 21.

## தீர்மானம்

*இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள நபர்களின் மூலம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் 2025 ஆம் ஆண்டிற்காக மாட்டிறைச்சி வியாபாரத்திற்காக கடை ஒன்றினை நடாத்திச் செல்வதற்காக அனுமதிப்பத்திரம் ஒன்றினை வேண்டி என்னிடம் விண்ணப்பப் பத்திரம் முன் வைக்கப்பட்டுள்ளது என்பதனையும், அவ் அனுமதிப் பத்திரத்தினை வழங்குவது தொடர்பாக கங்க இஹல கோரல பிரதேச சபை நிருவாக எல்லைக்குள் வசிக்கும் நபர் அல்லது நபரகள் எதிர்ப்பினை தெரிவிப்பார்கள் எனின் அவன் அல்லது அவள் அவ்வாறு எதிர்ப்பை தெரிவிப்பது எக் காரணத்தை அடிப்டையாகக் கொண்டு என்பது தொடர்பான விபரங்களை எழுத்து மூலமாக இரண்டு பிரதிகளுடன் கூடியதாக இவ் அறிவித்தல் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் IV (ஆ) பகுதியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் என்னிடம் அறிவித்து அனுப்பி வைக்கப்படல் வேண்டும் என்பதனை மாமிசத்திற்காக பிராணிகளை கொல்பவர்கள் தொடர்பான சட்ட மூலத்தின் 272 ஆம் அதிகாரத்தின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றேன்.*

## அட்டவணை

| விண்ணப்பதாரியின் பெயர் | மாமிசம் விற்கும் இடம் | வியாபாரத்தின் தன்மை |
|---|---|---|
| எஸ்.எச்.எம். பரீட் | இல. 215ஏ,<br>நாவலபிட்டிய பாதை,<br>உலபனை | மாட்டிறைச்சி வியாபாரம் |

11-198